# தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் விவசாயிகளின் தொடர்பு செயலி அறிமுக விழா







தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் கூழ்மரத்தோட்ட சாகுபடியை பண்ணைக்காடுகள் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யும் விவசாயிகளுக்கு தரமான குளோனல் தைலம் மற்றும் சவுக்கு மரக்கன்றுகளை நிறுவனமே உற்பத்தி செய்து வழங்கி வருகிறது. இத்திட்டத்தில் பதிவு செய்த விவசாயிகளின் நலன் கருதி, நமது நிறுவன களப்பணியாளர்கள் நடவு முதல் அறுவடை வரை அனைத்து தொழில்நுட்ப உதவிகளையும் வழங்குகிறார்கள். மேலும் அனைத்து விவசாயிகளும் நிறுவனத்தை இத்திட்டம் சம்மந்தமாக தொடர்பு கொள்ளவும் கூழ்மர சாகுபடி பற்றிய தொழில் நுட்பங்களை எளிதில் தெரிந்து கொள்ளும் வகையில் ஓர் புதிய கைப்பேசி தொடர்பு செயலியை டி.என்.பி.எல் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. (**TNPL FARM CONNECT APP**)

இந்த செயலியை **Google Play Store**ல் விவசாயிகள் இலவசமாக பதிவிறக்கம் செய்து பயனடையலாம். இந்த செயலியானது டி.என்.பி.எல் நிறுவன கூழ்மரங்கள் சாகுபடி மற்றும் அறுவடை சம்மந்தமான திட்டங்கள், அறிவிப்புகள், செய்தி குறிப்புகள், வெற்றி பெற்ற முன்மாதிரி விவசாயிகளின் கருத்துக்கள், தொடர்பு விவரங்கள், சாகுபடி குறிப்புகள், வானிலை பற்றிய தகவல்கள் போன்ற சிறப்பம்சங்களை உள்ளடக்கியது. மேலும், இச்செயலி மூலம் கூழ்மரங்கள் பயிரிட விரும்பும் விவசாயிகள் அனைவரும் உடனுக்குடன் நிறுவனத்தோடு நேரடியாக தொடர்பு கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு விவசாயிகள்

அவர்களது சந்தேகங்கள், தேவைகள் மற்றும் கருத்துக்களையும் தெரிவிக்க இயலும். இத்தகைய சிறப்புமிகு செயலி தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் எளிதில் பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த செயலியானது டி.என்.பி.எல் நிறுவனத்திற்கும் கூழ்மர விவசாயிகளுக்கும் ஓர் பாலமாக அமைந்து சிறந்த மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இச்செயலியை 12.03.2025 அன்று காலை 10.00 மணியளவில் முனைவர்.சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர். தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், அவர்கள் டி.என்.பி.எல் நிறுவத்தினுடைய **விவசாயிகளின் தொடர்பு செயலியை** அறிமுகப்படுத்தினார். அவருடன் நிறுவன மூத்த நிர்வாகிகள், அதிகாரிகள் மற்றும் டி.என்.பி.எல் நிறுவன கூழ்மர விவசாயிகள் பங்கேற்று சிறப்பித்தனர். மேலும் இச்செயலியை அனைத்து விவசாயிளும் பதிவிறக்கம் செய்து பயன்பெறுமாறு கேட்டுக் கொண்டார்.

GET IT ON
Google Play